அடையாள இலக்கம்:

**அகில அவுஸ்திரேலியா, நியூசிலாந்து**
**தமிழ் ஊக்குவிப்புப் போட்டிகள் - 2011**

அவுஸ்திரேலியா பட்டதாரிகள் தமிழர் சங்கம்
Tamil Competition – Australian Society of Graduate Tamils

# எழுத்தறிவுப் போட்டி – பகுதி 1

**மேற்பிரிவு**
(10-11 வயதுப் பிரிவு)

காலம்: மு.ப. 9.30 மணி, ஞாயிற்றுக்கிழமை

நேரம் : 2.00 மணி

பரீட்சைத் தாளை வாசிக்க மேலதிக 10 நிமிடங்கள் வழங்கப்படும்

**அ) பின்வரும் சொற்களைப் பிரித்து எழுதுக.**

*புள்ளிகள்: 5*

1. வனவிலங்கு ……………+……………..
2. வாழைமரம் ……………+……………..
3. குருட்டுப்பையன் ……………+……………..
4. முத்துப்பல் ……………+……………..
5. தேரோட்டி ……………+……………..

| புள்ளிகள் | |
|---|---|

**ஆ) பின்வரும் சொற்களைச் சேர்த்து எழுதுக.**

*புள்ளிகள்: 5*

1. கண் + இமை = ………………………….
2. மரம் + கிளை = ………………………….
3. வாழை + குலை = ………………………….
4. பள்ளி + பை = ………………………….
5. மரம் + வேர் = ………………………….

**இ) கோடிட்ட இடங்களில் பொருத்தமான சொல்லைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

*புள்ளிகள்: 10*

1. எல்லா உயிர் உள்ள பிராணிகளுக்கும் ……………..… (மூலை, மூளை) இருக்கிறது.
2. குயின்சிலாந்து மாநிலத்தில் ……………..(வெள்ளம், வெல்லம்) ஏற்பட்டுப் பல அழிவுகளை ஏற்படுத்தி விட்டது.
3. எழுதுவதற்குத் ……………….. (தாள், தாழ்) வேண்டும்.
4. அந்தக் காகித ………….. ……(உரையில், உறையில்) என்ன இருக்கிறது?
5. வேடன் பறவைகளைப் பிடிக்கத் தான் விரித்த ……………………… (வழையில், வலையில்) தானியங்களைத் தூவினான்.

6. தீபாவளிப் பண்டிகைக்காக எனது பாட்டி ……………..ச் (முருக்கு, முறுக்கு) சுடுவது வழக்கம்.

7. அவுஸ்திரேலியா ஒரு…………….. (வலம், வளம்) கொழிக்கும் நாடு.

8.…………………..(பழம், பலம்) இல்லாதவர்கள் சத்துள்ள உணவுகளை உண்ண வேண்டும்.

9. இருதய நோய் உள்ளவர்கள் எண்ணெயிற் ……………… (பொறித்த, பொரித்த) உணவுவகைகளைத் தவிர்த்தல் நல்லது.

10. பஞ்ச வர்ணக் …………(கிழி, கிளி ) மிகவும் அழகானது.

| புள்ளிகள் | |
|---|---|

**ஈ) கீழே தரப்பட்ட சொற்களைப் பாவித்து அவற்றின் பொருள் விளங்கும் படி வாக்கியங்கள் அமைக்கவும்.**

***புள்ளிகள்: 20***

1. மழை ------------------------------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------------------------------

2. புத்தகம் ------------------------------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------------------------------

3. பாரதியார் ------------------------------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------------------------------

4. நல்ல பழக்கம் ------------------------------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------------------------------

5. விளையாட்டு ------------------------------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------------------------------

6. குடும்பம் ------------------------------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------------------------------

7. சகோதரி ------------------------------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------------------------------

8. வாழ்க்கை ------------------------------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------------------------------

9. கல்வி ----------------------------------------------------------------------------------------------------------------------------

----------------------------------------------------------------------------------------------------------------------------------

10. கெட்டித்தனம் -----------------------------------------------------------------------------------------------------------------

----------------------------------------------------------------------------------------------------------------------------------

| புள்ளிகள் | |
|---|---|

**உ) பொருத்தமான சொற்களைப் பாவித்துக் கீழே தரப்பட்ட வாக்கியங்களைப் பூர்த்தி செய்யவும்.** ***புள்ளிகள்: 20***

1. கடற்கரை மணலில் சிறுவர் கட்டிய வீடுகளைக் கடல் அலை ……………………………………………
2. தேசிய நூலகத்தில் பல ஆயிரக்கணக்கான ………………………………… உள்ளன.
3. கை தவறியதால் கண்ணாடி கீழே …………………… .
4. விபத்தில் தன் மகன் இறந்துவிட்டான் எனக் கேள்விப்பட்ட தாய் கதறி…………………………
5. கடும் புயலில் சிக்கியதால் கடலிற் சென்ற கப்பல் நீரில் …………………………..
6. நல்ல புத்தகங்களைப் படிப்பதால் அறிவு …………………………
7. அருள் நன்றாகத் தமிழ் பேசுவதை எல்லோரும் …………………
8. நாய்களுக்கு ………………………. சக்தி அதிகம் உண்டு.
9. குழந்தைகளுக்கு …………………….. தீட்டுவது ஒரு விருப்பமான செயல் ஆகும்.
10. குழந்தைகள் அழகிய சித்திரங்கள் கொண்ட புத்தகங்களை …………..… படிப்பார்கள்.

| புள்ளிகள் | |
|---|---|

அடையாள இலக்கம்:

அகில அவுஸ்திரேலியா, நியூசிலாந்து
தமிழ் ஊக்குவிப்புப் போட்டிகள் - 2011

# எழுத்தறிவுப் போட்டி – பகுதி 2

**மேற்பிரிவு** (10-11 வயதுப் பிரிவு)

காலம்: மு.ப. 9.30 மணி, ஞாயிற்றுக்கிழமை

நேரம் : 2.00 மணி

ஊ) **கீழே கீழே தரப்பட்ட சொற்களில் இருந்து பொருத்தமான சொற்களாற் பந்தியில் உள்ள இடைவெளிகளை நிரப்பவும்.**

**புள்ளிகள் 20**

“இன்று பொதுவிடுமுறை அல்லவா? நான் எல்லோரையும் திரைப்படம் பார்க்க அழைத்துச் செல்லப்போகிறேன்” என்று பரதனின் தந்தை சொன்னார். அதைக் கேட்ட பரதனும் அவனுடைய சகோதரர்களும் ......................துள்ளிக் குதித்தார்கள். புரதனின் தாயாரையும் அழைத்துக்கொண்டு எல்லோருமாக அருகில் உள்ள ................................ போனார்கள். அங்கு ஒரே கூட்டமாக இருந்தது. பரதனின் தந்தை ......................................வாங்குவதற்காகச் சென்றார். பரதனும் அவனுடைய சகோதரர்களும் அங்கிருந்த கடையில் சில ................................... வாங்கினர். அரங்கின் வெளிச் சுவர்களிற் பல விதமான ............................. ஒட்டப்பட்டிருந்தன. பரதனின் தாயார் அவற்றைப் பார்த்துக் கொண்டிருந்தார்.

திரைப்படம் ஆரம்பிப்பதற்கு அறிகுறியாக மணி ஒலித்தது. படம் பார்க்கச் சென்ற ..........................திரையரங்கிற்குள்ளே சென்றனர். அங்கே கடமையிலிருந்த ஊழியர் ஒருவர் வந்தவர்களுக்கு அவர்கள் அமர வேண்டிய இருக்கைகளைக் ..................... எல்லோரும் தங்கள் தங்கள் இருக்கைகளில் அமர்ந்தார்கள். சிறிது நேரத்தில் படம் தொடங்கியது. அதிலே அடிக்கடி நகைச்சுவைக் காட்சிகள் வந்தபடியால் எல்லோருடைய ..................... அரங்கில் ஒலித்துக் கொண்டிருந்தது. படம் முடிந்ததும் பரதனும் அவனுடைய குடும்பத்தினரும் ...................................இருந்த ஒரு உணவகத்திற்குச் சென்று நன்றாக உண்டார்கள். அவர்கள் வீட்டிற்குத் திரும்பும் பொழுது தாம் இரசித்த காட்சிகளைப் பற்றிப் ....................................மகிழ்ச்சியாகச் சென்றார்கள்.

| | |
|---|---|
| விளம்பரங்கள் | அண்மையில் |
| மகிழ்ச்சியில் | பேசிக்கொண்டே |
| காண்பித்தார் | தின்பண்டங்களை |
| நுழைவுச்சீட்டுகளை | திரையரங்கத்திற்குப் |
| சிரிப்பும் | அனைவரும் |

| | |
|---|---|
| **புள்ளிகள்** | |

**எ) பின்வரும் கவிதையைப் படித்தபின் தரப்பட்ட வினாக்களுக்கு விடை எழுதுக. புள்ளிகள்: 20**

# காந்தி மகான்

காந்தி மகான் கதைகேளு பாப்பா – அது
காட்டும் அன்பு சத்தியமே பாப்பா.
சாந்த சீல சத்தியராம் பாப்பா – அவர்
சக்தி ஒன்றே நம் துணையாம் பாப்பா!

போர்பந்தர் எனும் ஊரில் பிறந்தார் - இந்த
பூவுலகில் ஏழை கண்ணைத் திறந்தார்.
போர் வந்து சேருவதைத் தடுத்தார் - தன்
பொழுதெல்லாம் அகிம்சைக்கே உழைத்தார்

சுதந்திரமாம் நற்பயிரை வளர்த்தார் - அதைச்
சுற்றிவந்த களைகளையும் அழித்தார்.
விதவிதமாய் நல்ல உரம் கொடுத்தார் - நாம்
வீழ்ந்திடாமல் வாழ வழி எடுத்தார்.

காந்தி மகான் வழியினிலே பாப்பா – நீ
காலமெல்லாம் சென்றுவிடு பாப்பா.
சாந்த சீல சத்தியராம் பாப்பா – நம்
சந்ததிக்கு உற்றதுணை பாப்பா

1 காந்தி மகான் பிறந்த ஊர் எது?

…………………………………………………….

2 காந்தி மகான் யாருடைய கண்ணைத் திறந்தார்?

……………………………………………

3 இந்திய சுதந்திரத்திற்காகக் காந்தி அவர்கள் கையாண்ட வழி எது?

………………………

4 காந்தி அவர்கள் வளர்த்த நற்பயிர் எது?

…………………………………………………….

5 காந்தி மகான் எப்படிப்பட்டவர்?

………………………………………………………………….

| புள்ளிகள் | |
|---|---|

| மொத்தப் புள்ளிகள் | |
|---|---|